மாலை முரசு

25.04.2024



இந்திய பிரதமர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மதுரை கலெக்டர் சங்கீதாவிடம் மனு அளித்தனர்.இதில் வழக்கறிஞர்கள் சி.ஜே.ராஜன்,ஜான் வின்செண்ட்,சந்தனம்,கணேசன் ம.தி.மு.க. தொழிற்சங்க பொது செயலாளர் மகபூப் ஜான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மத வெறுப்பை தூண்டும் வகையில்

# பிரதமர் மோடி பேசிவருவது தேர்தல் ஆணைய வழிமுறைகளுக்கு எதிரானது!

## மதுரை மாவட்ட ஆட்சியரிடம் சமூக அமைப்புகள் புகார்!!

மதுரை,ஏப்.25–

இந்திய பிரதமர் நரேந்திர மோடி ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாரா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் போது சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் பேசியும், உண்மைக்கு மாறான கருத்துக்களை பிரச்சார மேடைகளில் கூறியும், அதனால் நாட்டில் பதட்டத்தை ஏற்படுத்தியும், ஒரு சமூகத்தின் மீது வெறுப்புணர்வை தூண்டியும் வருகின்றார். இது நாடுமுழுவதும் பேசும் பொருளாகவும் கண்டனத்துக்குரியதாகவும் மாறிவருகிறது.

பிரதமர் மோடி இந்த போக்கை கண்டித்து இந்திய தேர்தல் ஆணையம் உடனடியாக அவர் மீது நடவடிக்கை கோரி மதுரையில் உள்ள சிவில் சமூக அமைப்புகளான மக்கள் சிவில் உரிமைக் கழகம், நாட்டைக் காப்போம், மக்கள் கண்காணிப்பகம், தமிழக பொது மேடை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட அமைப்புகள் 24ஆம்தேதி மதுரை மாவட்ட தேர்தல் அதிகாரியான மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து புகார் மனுவினை அளித்தனர். இது குறித்து நாட்டைக்காப்போம்அமைப்பின் அமைப்பாளர் வழக்கறிஞர் .சி. ஜே.ராஜன் பேசியப்போது பிரதமர் இப்படி பேசுவதை உடனடியான நிறுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் வரம்புமீறி பேசியுள்ள பிரதமர்மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் இந்திய தேர்தல் ஆணையம் மௌனம் காப்பது மிகுந்த கவலையை தருகிறது.

அதனால் சிவில் சமூக அமைப்புகளின் புகாரை பெற்றுக்கொள்ளும் இந்திய தேர்தல் ஆணையமானது உடனடியாக சட்டபூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளாக வழக்கறிஞர்கள் சி.சே.இராஜன், ஜான் வின்சென்ட், சந்தனம், தியாகராஜன், கணேசன், வெங்கட் ராமன் மற்றும் ம.தி.மு.க. தொழிற்சங்க பொது செயலாளர் மகபூப் ஜான், மற்றும்சமூக ஆர்வலர் ஜெயக்குமார் ஆகியோர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து புகாரினை அளித்தனர்.